செ.வெ.எண்: 38 / மார்ச் நாள்: 22.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## திருவாடானை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இன்று (22.03.2016) மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை துவக்கி வைத்து பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

முதலாவதாக திருவாடானை சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட தொண்டி பேரூராட்சியில் பொதுமக்கள் கலந்து கொண்ட வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு குறித்து துண்டுப்பிரசுரங்களை வழங்கி தேர்தல் வாக்குப்பதிவு நாளான மே 16 அன்று பொதுமக்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்திட வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அதன்பின்பு தொண்டியில் உள்ள பாரத் (Bharath) சமையல் எரிவாயு சேமிப்பு நிலையத்தில் உள்ள சமையல் எரிவாயு உருளைகளிலும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கும் தனியார் நிறுவனத்தில் உள்ள குடிநீர் கேன்களிலும் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த ஒட்டு வில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் பொதுமக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு குறித்து துண்டுப்பிரசுரங்களை வீடு வீடாகச் சென்று வழங்கியும், மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்க ஏதுவாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண் 1800 425 7038 குறித்த விளம்பரம் ஒட்டுவில்லைகளை பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் பேருந்துகளில் ஒட்டியும், பேருந்து நடத்துநர்களின் தோள் பைகளில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த ஒட்டு வில்லைகளை ஒட்டியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து தொண்டி பேரூராட்சிக்குட்பட்ட நம்புதாளை அரசு பேரூராட்சி பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பெற்றோர்களிடமிருந்து கையொப்பம் பெறுவதற்கான வாக்காளர் உறுதிமொழி படிவத்தினை வழங்கினார். மாணவ, மாணவியர்கள் மூலம் அவர்களது பெற்றோர்களிடத்தில் வாக்காளர் உறுதிமொழி படிவத்தில் கையொப்பம் பெறுவதனால் தேர்தல் வாக்குப்பதிவு நாளான மே 16 அன்று தவறாமல் வாக்களித்திட வேண்டும் என்ற எண்ணம் பெற்றோர்களுக்கு இயற்கையாகவே ஏற்படும் என மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் திருவாடானை சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் திரு.ராஜசேகரன்,வட்டாட்சியர்கள் திரு.சுகுமார், திரு.காளிமுத்து, தொண்டி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.ஜெயந்தி உள்பட அரசு அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது**